அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ்

# ஆண்டு 11

புலன்மொழி வளத்தேர்வு கேட்டலும் விளங்கிக்கொள்ளுதலும்

சுட்டெண்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

## ‘அ’ பகுதி

**ஒலிவட்டில் ஒலிக்கப்படும் உரைப்பகுதியைக் கேட்டு, விளங்கிக் கொண்டு, கீழ்க்காணும் கூற்றுகள் சரியாயின் ✓ எனவும், பிழையாயின் X எனவும் கட்டத்தினுள் அடையாளமிடுக.**

1. இலக்கியத் திறனாய்வு உளவியல் சார்ந்த மொழித் துறையாக உருவெடுத்துள்ளது. ☐

2. இலக்கியத் திறனாய்வு இக்கால இலக்கியங்களின் போக்கை வெளிப்படுத்தத் துணை புரிவதில்லை. ☐

3. ஒரு திறனாய்வாளனின் பண்பு படைப்பாளியின் உற்ற தோழனாக இருப்பது. ☐

4. திறனாய்வாளன் ஓர் இலக்கியத்தின் சுவை, தனித்தன்மை ஆகியவை பற்றிக் கூறுவதில்லை. ☐

5. திறனாய்வாளன் ஓர் இலக்கியத்தின் கட்டமைப்பு, அதன் நோக்கம் ஆகியவற்றைச் சொல்கிறார். ☐

6. இலக்கியங்களின் நூற்பாக்களுக்கு எழுதப்படும் உரைகள் அந்நூற்பாக்களை வாழவைக்கின்றன. ☐

7. படைப்பாளியின் தனிப்பட்ட திறன், ஆளுமை என்பன பற்றிச் சொல்லும்போது காணப்படும் அணுகுமுறை படைப்பாளியை ஊக்குவிப்பதில்லை. ☐

8. இலக்கியங்களைப் படிப்பதற்கான தூண்டலைச் செய்யும் ஊக்கியாகத் திறனாய்வு திகழ்கிறது. ☐

**(8 x ½ = 4 புள்ளிகள்)**

## ‘ஆ’ பகுதி

**ஒலிவட்டில் ஒலிக்கப்படும் உரையாடற்பகுதியைக் கேட்டு, விளங்கிக்கொண்டு, கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சுப்பிரமணிய பாரதியார் ஆற்றிய பணிகள் இரண்டு தருக?

______________________________

2. இலக்கியத்தின் நோக்கம் பற்றிய பாரதியாரின் கணிப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக?

______________________________

3. யாமறிந்த புலவரிலே எனத் தொடங்கும் பாடல் வரிகளில் பாரதியார் குறிப்பிடும் புலவர்கள் இருவரின் பெயர்களைத் தருக.

______________________________

4. பாரதியார் எத்தனையாம் ஆண்டில் ஐக்கூ கவிதைபற்றி எழுதியுள்ளார்?

______________________________

5. பாரதியார் ஐக்கூ கவிதையை திருக்குறளோடு ஒப்பிடுவதன் காரணம் யாது?

______________________________

6. பாரதியார் எத்தகைய கவிதைகளை மொழிபெயர்த்துத் திறனாய்வு செய்துள்ளார்?

______________________________

**(6 x 1 = 6 புள்ளிகள்)**

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| அ<br>1 – 8 | 4 | | | |
| ஆ<br>1 – 6 | 6 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 10 | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |